பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
10 12 2024 7 15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையாற்றுகிறார்.

2. இந்தியா - ரஷ்யா இடையிலான ராணுவ தொழில்நுட்ப ஆணைய கூட்டத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று பங்கேற்கிறார்.

3. விண்வெளி, கல்வி, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பஹ்ரைனுடனான ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. சுற்றுலாத் துறையில் நாட்டின் வருவாய் கடந்த பத்து ஆண்டுகளில் 42 சதவீதம் அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

5. ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி கட்டாக்கில் இன்று தொடங்குகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையாற்றுகிறார்.

1948ஆம் ஆண்டு ஐ.நா. பிரகடனத்தின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் தேதி சர்வதேச மனித உரிமைகள் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நாளையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லி விஞ்ஞான் பவனில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியில், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்கிறார்.

இதனிடையே தேசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தியாவில் இந்த ஆணையம் தொடங்கப்பட்ட 1993ஆம் ஆண்டில் இருந்து இதுவரை மனித உரிமை மீறல் தொடர்பாக 23 லட்சம் புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியா - ரஷ்யா இடையிலான ராணுவ தொழில்நுட்ப ஆணைய கூட்டத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று பங்கேற்கிறார்.

மாஸ்கோவில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் திரு ஆண்ட்ரே பெலோசோவ்-வுடன் இணைந்து திரு ராஜ்நாத் சிங் தலைமை வகிக்கவுள்ளார்.

இருநாட்டு ராணுவத்திற்கு இடையேயான ஒத்துழைப்பு, பாதுகாப்புத் துறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகள் போன்றவற்றை இரு அமைச்சர்களும் ஆய்வு செய்யவுள்ளனர்.

இருநாட்டு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர்கள் ஆலோசனை நடத்துவார்கள்.

பரஸ்பர அக்கறை கொண்ட மண்டல, உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வார்கள்.

ரஷ்யாவில் உள்ள இந்திய சமூகத்தினருடனும் திரு ராஜ்நாத் சிங் இன்று கலந்துரையாடவுள்ளார்.

<<<<>>>>

விண்வெளி, கல்வி, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பஹ்ரைனுடனான ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

மனாமாவில் நேற்று நடைபெற்ற நான்காவது இந்திய – பஹ்ரைன் கூட்டு ஆணையக் கூட்டத்தில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. அப்துல் லத்தீஃப் பின் ரஷீதுடன் இணைந்து திரு. ஜெய்சங்கர் பங்கேற்றார்.

வர்த்தகம், முதலீடு, சுகாதாரம், எரிசக்தி, சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக திரு. ஜெய்சங்கர் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் கருத்துகளை பரிமாறிக்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் சுற்றுலாத் துறை வருவாய், கடந்த பத்து ஆண்டுகளில் 42 புள்ளி ஐந்து மூன்று சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

ராஜஸ்தான் உலக முதலீட்டாளர் மாநாட்டில் சுற்றுலா தொடர்பான அமர்வில் பங்கேற்றுப் பேசிய அவர், இந்தியாவின் சுற்றுலாத் துறை ஏராளமான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது என்றார்.

43 உலக பாரம்பரிய இடங்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 3 ஆயிரத்து 500 நினைவுச்சின்னங்கள் உள்ளிட்டவை இந்தியாவில் உள்ளன என்றார்.

100 சுற்றுலா உள்கட்டமைப்புத் திட்டங்கள் நிறைவடைந்துள்ளதாகவும், இது சுற்றுலாத்துறையில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<>>>>

அரசின் பல்வேறு துறைகளுக்கு இடையே ஒரு இணைப்புப் பாலமாக திறன் மேம்பாட்டு ஆணையம் திகழ்கிறது என்று மத்திய பணியாளர் நலன் மற்றும் பொது மக்கள் குறைதீர்ப்புத் துறை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

ஆளுகைப் பயிற்சியை வலுப்படுத்தும் வகையில் அம்ரித் கியான் கோஷ் என்ற தளத்தைப் புதுதில்லியில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர் நிர்வாகப் பயிற்சியில் கோட்பாடுகளுக்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க வேண்டும் என்றார்.

ஐஜிஓடி தளத்தில் அம்ரித் கியான் கோஷ் என்ற பிரத்யேக இணைப்பு இடம்பெறும் என்று அவர் கூறினார்.

அம்ரித் கியான் கோஷ் நிர்வாகப் பயிற்சியை மேம்படுத்தும் என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் சேதுராமனுடன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் மூன்றாவது பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

<<<<>>>>

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் கடந்த 10 ஆண்டுகளில் மிகப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

ராஜஸ்தான் உலக முதலீட்டாளர் மாநாட்டில் எரிசக்தி தொடர்பாக நடைபெற்ற அமர்வில் கலந்து கொண்டு பேசிய அவர், 2030-ம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை 500 ஜிகா வாட்டாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

ராஜஸ்தானில் இரண்டாயிரம் மெகாவாட் திறன் கொண்ட புதிய சூரிய சக்திப் பூங்காவுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டார்.

<<<<>>>>

விளையாட்டுத் துறையில் கடந்த பத்து ஆண்டுகளில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற 10-வது ஆசிய-பசிபிக் காது கேளாதோர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற இந்திய குழுவினருக்கு, புதுதில்லியில் நடைபெற்ற பாராட்டு விழா நிகழ்ச்சியில் நேற்று அவர் பங்கேற்றார்.

இந்தியாவிலிருந்து 68 பேர் பங்கேற்ற இப்போட்டியில் 8 தங்கம், 18 வெள்ளி மற்றும் 29 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 55 பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது என்று அவர் கூறினார்.

இது குறிப்பிடத்தக்க சாதனை என்று அவர் தெரிவித்தார்.

விளையாட்டு உள்கட்டமைப்புகளை அரசு மேம்படுத்தி வருவதுடன் வீரர்களுக்கு சிறப்புப் பயிற்சிகளையும் வழங்கி வருவதாக திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

இந்தியாவின் டிஜிட்டல் கட்டமைப்பு உலகுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது என மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

இந்திய இணைய ஆளுகை மன்றக் கூட்டத்தைப் புதுதில்லியில் நேற்றுத் தொடங்கி வைத்துப் பேசிய அவர், அரசின் முன்முயற்சிகள் டிஜிட்டல் இடைவெளியைக் குறைத்துள்ளன என்றார்.

தற்போது நாட்டில் 95 கிராமங்கள் 3-ஜி அலல்து 4-ஜி சேவை மூலம் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

100 கோடிக்கும் மேற்பட்டோர் மொபைல் இணைய சேவைகளைப் பயன்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யுபிஐ, ஆதார் மற்றும் பாரத் நெட் திட்டம் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக திரு ஜிதின் பிரசாதா தெரிவித்தார்.

<<<<>>>>

கர்நாடக முன்னாள் முதலமைச்சர் திரு. எஸ்.எம். கிருஷ்ணா மாண்டியா மாவட்டம் **Maddur**-ல் இன்று அதிகாலை அவரது இல்லத்தில் காலமானார். அவருக்கு வயது 92.

மத்திய வெளியுறவு அமைச்சராகவும் அவர் பதவி வகித்துள்ளார்.

<<<<>>>>

ஒடிசாவின் புவனேஸ்வரில் அடுத்த மாதம் 8-ம் தேதி முதல் 10-ம் தேதி வரை வெளிநாடு வாழ் இந்தியர் தின நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக அந்த மாநில முதலமைச்சர் திரு மோகன் சரண் மஜி கூறியுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை நேற்று ஆய்வு செய்த அவர், பின்னர் பேசுகையில், இந்த நிகழ்வுக்காக மாநிலத்தில் உள்ள சுற்றுலா தலங்கள் அழகுபடுத்தப்பட்டு வருகின்றன என்றார்.

9-ம் தேதி நடைபெறும் நிகழ்ச்சிகளில் பிரதமர் திரு நரேந்திர மோடியும் 10-ம் தேதி நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவும் பங்கேற்க இருப்பதாக ஒடிசா முதலமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14 சதவீத பங்களிப்பை மகாராஷ்டிர மாநிலம் கொண்டுள்ளது என்று அம்மாநில ஆளுநர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிர சட்டமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் நேற்று அவர் உரையாற்றினார்.

2027-28 ஆம் ஆண்டிற்குள் மகாராஷ்டிராவை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றுவதை நோக்கி மாநில அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

முன்னதாக, திரு தேவேந்திர ஃபட்னாவிஸ் தலைமையிலான அரசு, நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது.

இதனையடுத்து நடைபெற்ற சட்டப்பேரவைத் தலைவர் தேர்தலில் பிஜேபி-யின் திரு ராகுல் நர்வேகர் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டார்.

பின்னர் பேசிய அவைத்தலைவர், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் சட்டமன்றத்தின் முழு செயல்பாடுகளும் டிஜிட்டல்மயமாக்கப்படும் என்றார்.

<<<<>>>>

மணிப்பூர் மாநிலத்தின் ஒன்பது மாவட்டங்களில் இணையதள மற்றும் மொபைல் இணைய சேவைகள் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

போராட்டங்கள் நடைபெற்றதைத் தொடர்ந்து ஆறு பள்ளத்தாக்கு மாவட்டங்கள் மற்றும் மூன்று மலை மாவட்டங்களில் கடந்த மாதம் 16-ம் தேதி முதல் இந்த சேவைகளுக்குத் தடை விதிக்கப்பட்டது.

சட்டம் ஒழுங்கு நிலைமையை ஆய்வு செய்த பின்னர் தடையை நீக்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மாநில உள்துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

டங்ஸ்டன் சுரங்க விவகாரத்தில் தமிழக அரசு இரட்டை நிலைப்பாட்டை கடைபிடித்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் சற்றுமுன் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொடக்கத்தில் இத்திட்டத்திற்கு மாநில அரசு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றார்.

பத்து மாதங்களாக அமைதியாக இருந்த பின்னர் தற்போது போராட்டங்கள் நடைபெறும் நிலையில் திமுக அரசு அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக அவர் கூறினார்.

பிஜேபியைப் பொறுத்தவரை இத்திட்டம் தேவையில்லை என மத்திய அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளதாக திரு. அண்ணாமலை தெரிவித்தார்.

<<<<>>>>

ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

கட்டாக்கில் வரும் 15ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியா, சீனா, ஜப்பான், தாய்லாந்து, டென்மார்க் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்தியாவின் சார்பில் பிரயன்ஷு ராஜவத், கிரண் ஜார்ஜ், சதீஷ்குமார் கருணாகரன், அனுபமா உபாத்யாயா, ரக்ஷிதா ராம்ராஜ் உள்ளிட்ட வீரர், வீராங்கனைகள் இப்போட்டியில் பங்கேற்க உள்ளனர்.

**<<<<The End>>>>**